# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL


## அரையாண்டு –மதிப்பீட்டுத் தாள்

## 2020 – 2021

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 11

சுட்டெண்:...........................................................

நேரம்: 180 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100

**1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய கூட்டில் புள்ளடி இடுக.**

1. அ இ உ என்பன

அ) மெய்யெழுத்துகள் ☐ ஆ) சுட்டெழுத்துகள் ☐

இ) உயிர்மெய்யெழுத்துகள் ☐ ஈ) வினாவெழுத்துகள் ☐

2. "வீட்டிலேயே தமிழைப் பேணும்

விதிசெயல் கடமை ஐய!" என்று கூறியவர்

அ) அம்பி ☐ ஆ) இரவி ☐

இ) சாலை இளந்திரையன் ☐ ஈ) உதயைவீரையன் ☐

3. பாங்கியர் என்ற சொல் குறிப்பது

அ) தோழியரை ☐ ஆ) உறவினரை ☐

இ) பகைவரை ☐ ஈ) நண்பரை ☐

4. நாவரசி வாசித்த கவிதை நன்றாக இருந்தது. இதில் வாசித்த என்பது

அ) வினையெச்சம் ☐ ஆ) வினைத்தொகை ☐

இ) பெயரெச்சம் ☐ ஈ) வினைமுற்று ☐

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

5. மாநாய்கனின் மகள்

அ) கண்ணகி ☐ ஆ) மணிமேகலை ☐

இ) மாதவி ☐ ஈ) ஐயை ☐

6. உருபு ஏற்காத வேற்றுமைகள்

அ) 5 ☐ ஆ) 2 ☐

இ) 6 ☐ ஈ) 3 ☐

TEDC

7. இளங்கோவடிகள் சிலப்பதிகார வாழ்த்துப்பாவில் ____________ ப் போற்றினார்.

அ) இயற்கையை ☐ ஆ) மாந்தரை ☐

இ) இறைவனை ☐ ஈ) மன்னனை ☐

8. அடுக்கிடுக்குத் தொடருக்கு ஓர் எடுத்துக்காட்டு

அ) பதைபதைத்து ☐ ஆ) அழுதழுது ☐

இ) சடசட ☐ ஈ) கல்லும்முள்ளும் ☐

9. யாழ்நூலகம் எரிக்கப்பட்ட ஆண்டு

அ) 1979 ☐ ஆ) 1980 ☐

இ) 1881 ☐ ஈ) 1981 ☐

10. அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு என்ற பழமொழி விளக்கும் கருத்து

அ ) ஏமாற்றி அழிக்கும் செயல் ☐

ஆ) பேராற்றலும் தோற்கும் ☐

இ) எதற்கும் எல்லையுண்டு ☐

ஈ) போலித்தோற்றம் ☐

11. யாழ்நூலகத்தின் முன்றலில் அமைந்துள்ள படிமம்

அ) கலைமகள் ☐ ஆ) அலைமகள் ☐

இ) மலைமகள் ☐ ஈ ) திருமகள் ☐

12. காவேரியைப் பெண்ணாக உருவகித்துப் பாடியவர்

அ) மாசாத்துவன் ☐ ஆ) கணிகன் ☐

இ) மாநாய்கன் ☐ ஈ) கோவலன் ☐

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
TEDC

13. இரண்டேகால் என்பது

அ) உம்மைத்தொகை ☐ ஆ) உவமைத்தொகை ☐

இ) பண்புத்தொகை ☐ ஈ) வினைத்தொகை ☐

14. தமிழர் போற்றத்தக்க கல்

அ) சிற்பக்கல் ☐ ஆ) வைரக்கல் ☐

இ) நடுகல் ☐ ஈ) சூளைக்கல் ☐

15. இறந்தகாலப் பன்மையைக் குறிக்கும் சொல்

அ) கூவின ☐ ஆ) கூவியது ☐

இ) கூவுகின்றன ☐ ஈ) கூவுகின்றது ☐

16. இலங்கையில் கண்ணகி வழிபாட்டைத் தொடக்கி வைத்தவன்

அ) செங்குட்டுவன் ☐ ஆ) இளங்கோவடிகள் ☐

இ) கயவாகு ☐ ஈ) புவனேகபாகு ☐

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

17. வாள் + படை

அ) வாள்ப்படை ☐ ஆ) வாள்படை ☐

இ) வாட்படை ☐ ஈ) வாட்ப்படை ☐

18. செயப்படுபொருள் குன்றியவினை

அ) கடி ☐ ஆ) பாடு ☐

இ) வரை ☐ ஈ) அழு ☐

TEDC

19. மஞ்சள் பூசி நீராடினாள். இச்சொல்லியத்தில் இடம்பெற்றுள்ள ஆகுபெயர்

அ) இடவாகுபெயர் ☐ ஆ) பொருளாகுபெயர் ☐

இ) குணவாகுபெயர் ☐ ஈ) சினையாகுபெயர் ☐

20. யாழ்நூலகக் கட்டிடத்துக்கான வரைபடத்தை வடிவமைத்தவர்

அ) க.மு.செல்லப்பா ☐ ஆ) தாவீது அடிகள் ☐

இ) ஐசாக் தம்பையா ☐ ஈ) கே. நரசிம்மன் ☐

21. மாதவியின் நாட்டிய அரங்கேற்றம் நடைபெற்ற இடம்

அ) புகார் ☐ ஆ) மதுரை ☐

இ) வஞ்சி ☐ ஈ) காஞ்சி ☐

22. வேந்தர்களுக்கான கூத்து

அ) பொதுவியல் ☐ ஆ) உளவியல் ☐

இ) வேத்தியல் ☐ ஈ) அறிவியல் ☐

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

23. உரைநடைப்பா மரபு தோன்றிய நூற்றாண்டு

அ) 18ஆம் நூற்றாண்டு ☐ ஆ) 20ஆம்நூற்றாண்டு ☐

இ) 15ஆம் நூற்றாண்டு ☐ ஈ) 17ஆம் நூற்றாண்டு ☐

24. உதயைவீரையன் பாடிய பாடல் வரி

அ) கல் என்றால் படிக்கல்லா! ☐

ஆ) வா தோழியே! ☐

இ) ஓடிடும் தமிழா நில் நீ! ☐

ஈ) பச்சைக் குழந்தையங்கே ☐

TEDC

25. மாற்றம் ஏதும் இன்றிப் புணர்வது

அ) தோன்றல் ☐ ஆ) திரிதல் ☐

இ) கெடுதல் ☐ ஈ) இயல்பு ☐

26. பின்வருவனவற்றுள் வேறுபட்ட சொல்

அ) மதி ☐ ஆ) ஞாயிறு ☐

இ) இரவி ☐ ஈ) பகலவன் ☐

27. உண்மை நண்பர் என்றும் உறுதுணையாக இருப்பர்.

இச்சொல்லியத்தில் இடம்பெற்றுள்ள உரிச்சொல்

அ) நண்பர் ☐ ஆ) உறு ☐

இ) இருப்பர் ☐ ஈ) உண்மை ☐

28. கண்ணகியின் சிலம்பினுள் இருந்தவை

அ) முத்துகள் ☐ ஆ) பவளங்கள் ☐

இ) மாணிக்கங்கள் ☐ ஈ) வைரங்கள் ☐

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

29. படர்க்கைப் பன்மைக்கு ஓர் எடுத்துக்காட்டு

அ) அவர்கள் ☐ ஆ) அது ☐

இ) அவன் ☐ ஈ) அவள் ☐

30. இலக்கிய வகையால் சொற்கள் ________ வகைப்படும்.

அ) ஆறு ☐ ஆ) நான்கு ☐

இ) இரண்டு ☐ ஈ) ஐந்து ☐

TEDC

புள்ளிகள் 30

**2) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.**

அருந்தும் உணவே அருமருந்தென அறிந்தவர் நம் தமிழ் மக்கள். தமிழ்மக்கள் உடற்கூறு பற்றிய அறிவிலும் மருத்துவம் பற்றிய புரிதலிலும் சிறந்து விளங்கினர். உலகில் பல்வேறு மருத்துவ முறைகள் இருந்தாலும் தமக்கென மரபுசார்ந்த மருத்துவ முறைகளை உருவாக்கிப் பின்பற்றி வந்தனர். மருத்துவ முறைகள் பற்றிய செய்திகளைச் சித்தமருத்துவர் அறிந்திருந்தனர். தொடக்ககாலத்தில் மாந்தருக்கு நோய் வந்தபோது இயற்கையாக வளர்ந்த மரம் செடி கொடிகளைக் கொண்டும் அவர்களுக்கு அருகில் கிடைத்த பொருள்களைக் கொண்டும் நோயைத் தீர்க்க முயன்றனர். மரங்களின் வேர், பட்டை, இலை, பூ, கனி போன்றவற்றை மருந்தாகப் பயன்படுத்தினர். இவ்வாறு மாந்தருக்கும் மருத்துவத்திற்குமான தொடர்பு தொடங்கியது. பழந்தமிழர்கள் மருத்துவத்தை அறிந்தது மட்டுமன்றி மருத்துவத்தில் சிறந்தும் விளங்கினர் என்பதற்கான குறிப்புகள் பழந்தமிழ் இலக்கியங்களில் காணப்படுகின்றன. ஆனால், இன்று நோய் வருவதற்கான முதன்மைக் காரணம் மக்கள் இயற்கையை விட்டு விலகி இருப்பதே. அதனால், மக்கள் நோயினால் அல்லற்படுகின்றனர். இன்று உலகம் முழுக்க பரவியிருக்கும் கொரோனாவால் மக்கள் பெருந் துன்பப்படுகின்றனர். அதற்குப் பழந்தழிழ் மக்களின் மூலிகைகளும் பலசரக்குகளும் உதவுகின்றன. இவையே நோய் எதிர்ப்புச் சக்தியைக் கூட்டுகின்றன. இன்று தழிழர்கள் மட்டுமல்ல உலகமக்கள் அனைவரும் இப்பலசரக்குகளை உணவாக உண்டு நோய் எதிர்ப்பு சக்தியைக் கூட்டுகின்றனர்.

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
TEDC

1. இன்று நோய் வருவதற்கான முதன்மைக் காரணம் என்ன?

2. மருத்துவ முறைகள் பற்றிய செய்திகளை அறிந்திருந்தவர் யார்?

3. எதனால் மக்கள் இன்று பெருந் துன்பப்படுகின்றனர்?

4. எவை நோய் எதிர்ப்புச் சக்தியைக் கூட்டுகின்றன?

5. தமிழர் எவற்றை மருந்தாகப் பயன்படுத்தினர்?

புள்ளிகள் 10

**3) பாடநூல் வினா ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.**

1. புலம்பெயர் தமிழர் தமிழை விட்டுவிடாமல் இருப்பதற்கு என்ன செய்ய வேண்டும் என்று அம்பியின் பாடல் கூறுகிறது?

_______________________________________________

_______________________________________________

2. யாழ்நூலகம் எக்கட்டிடக்கலையை ஒத்ததாகக் கட்டப்பட்டது?

_______________________________________________

_______________________________________________

3. நெஞ்சைஅள்ளும் மணியாரம் எனப் புகழப்படும் நூல் எது?

_______________________________________________

_______________________________________________

4. 1933 இல் தமது இல்லத்தில் நூல் நிலையத்தைத் தொடங்கியவர் யார்?

_______________________________________________

_______________________________________________

5. கண்ணகி விண்ணுலகம் அடைந்த நாடு எது?

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

_______________________________________________

6. "நீ கற்பின் கொழுந்து! உலகப் பேரொளி நீ கவலைப்படாதே" இக் கூற்று யாரால் யாருக்குக் கூறப்பட்டது.

_______________________________________________

7. தீக்குறிகளைக் கண்ட மாதரி ஆயர் குல மங்கையரை அழைத்து ஆடிய கூத்தின் பெயர் என்ன?

TEDC

_______________________________________________

புள்ளிகள் 10

**4.**



**தாய் மண்ணில் நான் பிறக்கவில்லை - என்**
**தாய் நாட்டை நான் மறக்கவில்லை**

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

TEDC

புள்ளிகள் 10

**5) இலக்கண / மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.**

1. வேற்றுமை உருபுகள் இடம்பெறுமாறு சொல்லியங்கள் எழுதுக.

   நான்காம் வேற்றுமை ______________________________

   ஏழாம் வேற்றுமை ______________________________

2. ஒவ்வோர் எடுத்துக்காட்டுத் தருக.

   வினைத்தொகை ____________________

   தொழிற்பெயர் ____________________

   பிறவினை ____________________

3. பின்வரும் கூட்டுச் சொல்லியத்தை தனிச்சொல்லியங்களாக மாற்றி எழுதுக.

   வீரன் வாளோடு போர்க்களம் சென்று, பகைவரை வென்று, வெற்றிக்கொடி நாட்டினான்.

   ______________________________________________

4. தரப்பட்டுள்ள வினைச்சொற்களின் வினையடிகளைக் கண்டறிந்து எழுதுக.

   எழுந்தான் ____________________

   வென்றனர் ____________________

   கண்டது ____________________

5. பின்வரும் சொற்கள் இடம்பெறுமாறு சொல்லியங்கள் எழுதுக.

   பண்பாடு ______________________________

   ஒற்றுமை ______________________________

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
TEDC

புள்ளிகள் 15

6) **பந்தியை வாசித்து, மூன்றில் ஒரு பகுதியாகச் சுருக்கி எழுதுக.**

மானம் என்பது தன்னிலையில் தாழாமையும் தாழ்வுவரின் உயிர் வாழாமையும் ஆகும். மாந்தர் தத்தம் தகுதி நிலையில் இருந்து தாழாமல் தம்மைக் காத்துக்கொள்ள வேண்டும். அவ்வாறு தற்காத்துக்கொள்ளாவிட்டால் பெரும் பழிக்கு ஆளாவர். மிகப்பெரிய வளத்தோடு உயர்ந்த வாழ்க்கை கிடைக்குமென்றாலும் கூட எந்நிலையிலும் மானத்திற்கு இழிவான செயல்களைச் செய்தல் கூடாது. மக்கள் அவரவர் பேண வேண்டிய ஒழுக்கத்திலிருந்து விலகிவிட்டால் அத்தகைய மாந்தரைக் குமூகம் வெறுத்து ஒதுக்கும். குமூகத்திலே அதிகளவு பெருமையோடு வாழ்பவர்கள் கூட மிகமிகச் சிறிய இழிவான செயலைச் செய்தாலும் தனது நிலையில் இருந்து தாழ்ந்து போய்விடுவர். எனவே மானத்தைக் காக்க விரும்புபவர் எந்த நிலையிலும் மானத்துக்கு இழிவான செயல்களைச் செய்தல் கூடாது. நல்லவர்கள் மானத்தைக் காக்க உயிரை விடுவார்களேயன்றி உயிருக்கு அஞ்சி மானத்தை இழக்கமாட்டார்கள். இதனாற்றான் எம் வீரர்களும் பகைவன் கையில் பிடிபட்டு மானம் இழக்கும் நிலை வந்து விடக்கூடாது என்பதற்காக கழுத்திலே நஞ்சைச் சுமந்தார்கள். மானத்திற்காக உயிரைவிட்டவர்களை உலகமே போற்றி வணங்கும். அதனாற்றான் நாமும் எம் மாவீரர்களை என்றும் போற்றி வணங்குகின்றோம்.

**சுருக்கத்திற்கான குறிப்புகள்:**

- தரப்பட்டுள்ள பந்தியை மீண்டும் மீண்டும் வாசித்து விளங்கிக் கொள்ளல்.
- அதன் உட்கருத்தை அறிதல்.
- உவமைகளையும் எடுத்துக்காட்டுகளையும் கூறியது கூறலையும் தவிர்த்தல்.
- எடுக்கப்பட்ட குறிப்புகளைத் தொகுத்து எழுதுதல்.

புள்ளிகள் 05

**7) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து 200 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- ✸ யாழ்நூலகம்

- ✸ ஊடகங்களில் தமிழ்

  ஊடகம் என்றால் என்ன

  ஊடகம் வளர்ச்சி அடைந்த காலமும் இன்றைய வளர்ச்சியும்

  ஊடகங்களின் சிறப்பியல்புகள்

  ஊடகங்கள் பற்றிய உமது கருத்து

- ✸ தாயகத்தில் இன்னலுறும் மக்களும் அவர்களுக்கு நாம் செய்ய வேண்டிய பணிகளும், உதவிகளும்.

புள்ளிகள் 20

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
TEDC